### சேலம் மாவட்டம் – காவிரி ஆற்றின் குறுக்கே இரண்டு பாலங்கள்!

# ஆய்வில் உறுதித் தன்மை இருக்குமானால் பணியை தொடர முன்னுரிமை அளிக்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!



சென்னை, பிப்.23-

காவிரியின் குறுக்கே இரண்டு பாலங்கள் அமைப்பது குறித்து ஆய்வில் உறுதித் தன்மை இருக்குமானால் பணியை தொடர அரசு முன்னுரிமை அளிக்கும் என்று சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் ஈ.ஆர்.ஈஸ்வரன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு பதில் வருமாறு:-

**ஈ.ஆர். ஈஸ்வரன்:** காவிரி ஆற்றின் குறுக்கே, சேலம் மாவட்டம் பூலாம்பட்டியையும், ஈரோடு மாவட்டம் நெருஞ்சிப்பேட்டையையும் இணைக்கின்ற ஒரு பாலம், சேலம் மாவட்டம் கொளத்தூர் ஒன்றியத்தில் கோட்டையூர் பகுதியையும், பெண்ணாகரத்தையும் இணைக்கின்ற ஒரு பாலம், காவிரி ஆற்றின் குறுக்கே இந்த இரண்டு பாலங்களும் அவசியமான பாலங்கள். அதை அமைச்சர் அவர்கள் முடித்துத் தர வேண்டும். கோட்டையூர், பெண்ணாகரம் பாலம் அமைக்கப்பட்டால், தோப்பூரிலே நடக்கின்ற விபத்துகளுக்கு ஒரு தீர்வு வரும், ஒரு மாற்றுப் பாதையாக அது இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு, இந்தப் பாலங்களை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** காவிரி ஆற்றுப் பாலத்தைப் பற்றி இரண்டு இடத்திலே அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டதை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர் கடிதம் கொடுத்தால், அதை ஆய்வு செய்து இந்த நிதி ஆண்டிலே சேர்த்துக் கொள்ள முடியுமா என்பது, முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னொன்று, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய அண்ணன் ஜி.கே. மணி அவர்கள் ஏற்கெனவே தொடர்ந்து இதே சட்டமன்றத்திலே அந்தக் கேள்வியை வைத்தார்கள். அதையே நீங்கள் தொடர்நது கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

ஏற்கெனவே, அதற்கு DPR தயார் செய்வதற்காக நாங்கள் சொன்னபோது, இல்லை, அது மேட்டூர் அணையினுடைய தண்ணீர் இருக்கிற இருப்பிலே அது இருக்கிறது. ஆதலால், அது pile foundation போட்டால் கூட நிற்க முடியாது என்று ஒரு DPR report கொடுத்து விட்டார்கள். ஆனாலும் அவர் விடுவதாக இல்லை. ஏனெனில், ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களிடம் கடிதம் கொடுத்து, அதன் மூலமாக வந்திருக்கிறது. மறுபடியும் அதற்கு முக்கியத்துவம் தந்து வேறொரு தனியார் company யை அழைத்து DPR தயார் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்திருக்கிறோம். Pile foundation போட்டு அதற்கு உறுதித் தன்மை இருக்குமேயானால் ஏனெனில் கடிதம் முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு சென்று, எங்கள் துறைக்கு வரப்பெற்றிருப்பதால் அதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதன் அடிப்படையிலே எங்கள் துறையில் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். முதல் ஆய்வில் அது முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

இரண்டாவதாக, இன்னும் திறமையானவர்களை அழைத்து அவர்களிடம் இதைக் கொடுத்திருக்கிறோம். அவை pile foundationல் போட்டால் அந்தப் பாலம் நிற்கும் என்ற நிலை ஏற்பட்டால், அந்தப் பணிகளைத் தொடரலாம். ஏனென்றால், நீங்கள் சொல்கிறீர்கள் என்பதற்காக pile foundation போடப்பட்டு, பாலத்தைக் கட்டி, அதற்குப்பின் பாதுகாப்புத் தன்மை இல்லை என்று சொன்னால், அது எந்தளவிற்கு விமர்சனத்திற்கு ஆளாகும் என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டாவதாக செய்யப்படும் DPRல் முறையாக உறுதித் தன்மை இருக்குமேயானால் அந்தப் பணிகளைத் தொடருவது குறித்து அரசு அதற்கு முன்னுரிமை அளிக்கும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.

---

### இந்தியாவிலேயே கடந்த 3 ஆண்டுகளில்

# 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தந்தது தமிழ்நாடுதான்!

## கழக அரசின் சாதனை! பேரவையில் - அமைச்சர் சி.வெ.கணேசன் ஆதாரங்களுடன் விளக்கம்!



**சென்னை, பிப். 23 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், பேரவை விவாதத்தின் போது குறுக்கிட்டு விளக்கமளித்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், “இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையாக, தமிழ்நாட்டில் தளபதி தலைமையில் ஆட்சி அமைந்த கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.பி. உதயகுமார்:** இந்த அரசினுடைய சாதனையாக இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கியதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதிலே ஒரு சின்ன clarification. உங்களுடைய தேர்தல் அறிக்கையில் மூன்று இலட்சம் பேர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு தருவதாக, ஆண்டுக்கு 10 இலட்சம் பேர்களுக்கு, 5 ஆண்டுகளுக்கு 50 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாகச் சொல்லியருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்திருப்பது 28,000 பேர்தான். மற்றது எல்லாம் கருணை அடிப்படையில், TNPSC, சீருடைப் பணியாளர்கள் எல்லாம் சேர்த்து. ஆகவே, அந்தத் தகவல் என்பது சரியான தகவலாக இல்லை. ஆகவே, ஆண்டுக்கு 10 இலட்சம் என்ற வீதம் 50 இலட்சம் பேர்களுக்கும், மூன்றரை இலட்சம் பேர்களுக்கு அரசுப் பணி வழங்குவதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் சி.வி. கணேசன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு தரப்பிலே, TNPSC-தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகப் பணிக்குச் செல்வோர் ஒருபுறம் இருந்தாலும், தனியார் தொழில் நிறுவனங்களில் இதுவரையிலே, வருகிற 24 ஆம் தேதியன்று 2 இலட்சம் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்குகின்ற அளவிற்கு இந்த அரசு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தந்திருக்கிறது. அதேபோல, வருங்கால வைப்பு நிதி நிறுவனம் குறித்து ஒன்றிய அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அது என்ன வென்றால், இந்தியாவிலே, இதுவரையில் தமிழ்நாட்டில் 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்த மாநிலம் தமிழ்நாடு என்ற செய்தியை வெளியிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

### மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ள – மீனாட்சி சொக்கநாதர்

# ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இராஜகோபுரம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்!

## சட்டப்பேரவையில் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



**சென்னை, பிப். 23 -**

**“மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ள மீனாட்சி சொக்கநாதர், ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இராஜ கோபுரம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்!” என, சட்டப் பேரவையில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு குறிப்பிட்டார்.**

இது குறித்து விவாதம் வருமாறு:-

**எஸ்.சதாசிவம்:** மேட்டூர் நகராட்சிப் பகுதியிலுள்ள மீனாட்சி சொக்கநாதர் மற்றும் ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக் கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** உறுப்பினர் இராஜ கோபுரம் கோரியுள்ள திருக்கோயிலானது 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்ட திருக்கோயிலாகும். இந்த திருக்கோயிலுக்கு ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் விமானங்கள் மற்றும் பரிவார சன்னதிகளின் திருப்பணி பாலாலயம் இன்று தொடங்கப் பட்டுள்ளது. மூன்று நிலை ராஜகோபுரம் அமைப்பதற்கு மண் பரிசோதனை செய்யும் பணி முடிவுற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து அடுத்தகட்ட பணிகளை விரைவுப்படுத்தி மூன்று நிலை ராஜகோபுரம் கட்டுகின்ற பணியை விரைவில் தொடங்கப்படும்.

**எஸ்.சதாசிவம்:** அந்த கோயிலுக்கு ராஜகோபுரம் வேண்டும் என்று கேட்டு, அதும் அது ஆய்வில் இருக்கிறது என்று சொல்லி இருக்கின்றார்கள். அந்த கோயிலில் 17 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பில் இருக்கின்றது அதை அகற்ற வேண்டும். அதேபோல் கோயில் குடமுழுக்கு செய்யும் போது அன்னதானத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். குளத்தூர் ஒன்றியம் பாலவாடியில் இருக்கும் ஜலகண்டேஸ்வரர் கோயில் 15 ஆண்டு காலம் குடமுழுக்கு செய்யாமல் இருக்கின்றது. அதற்கு குடமுழுக்கு செய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கோனூர் கிராமத்தில் சென்றாய பெருமாள் கோயிலில் திருப்பணி முடிந்த நிலையில் இருக்கின்றது. எப்போது கும்பாபிஷேகம் நடைபெறும்?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு :** உறுப்பினர் கூறிய அந்த 17 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு திராவிட மாடல் ஆட்சியில் இதுவரையில் ரூ. 5,718 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்ட வரலாறு நடந்தேறி இருக்கின்றது. குடமுழுக்குகளை பொறுத்தளவில் இன்றைக்கு ஒரே நாளில் மட்டும் 32 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடந்து கொண்டிருக்கின்றது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 33 மாதங்களில் 1,428 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலே இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையில் குடமுழுக்கு நடைபெற்ற ஆட்சி என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் கோரிய இராஜ கோபுரத் திருப்பணிக்கு மண் பரிசோதனை முடிந்து விட்டது. சென்றாய பெருமாள் திருக்கோயிலானது சட்டப்பிரிவு 49(i) கீழ் வருகின்ற, போதிய நிதி வசதி இல்லாத திருக்கோயிலாக இருந்தாலும், உபயதாரர் நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.சதாசிவம்:** மேச்சேரி பசுபதீஸ்வரர் கோயில், காமாட்சி அம்மன் கோயில், புக்கம்பட்டி சென்றாய பெருமாள் கோயில் ஆகிய கோயில்களில் திருப்பணிகள் தொடங்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அந்தப் பணிகளை விரைவுப் படுத்தி குடமுழுக்கு நடத்த வேண்டும் என கேட்டு அமருகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** மேச்சேரி, பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் விருந்து மண்டபம், பக்தர்கள் தங்கும் மண்டபம், பணியாளர் குடியிருப்பு, வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகள் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அப்பணிகளின் ஒப்பந்தக் காலம் 18 மாதங்களாகும். எனவே, அப்பணிகள் 18 மாத காலத்திற்குள் நிச்சயம் முடித்து தரப்படும். முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையைப் பொறுத்தளவில், இன்னார் இனியவர் என்று பார்க்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளதற்கிணங்க, உறுப்பினர் அவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு பி.கே.சேகர் பாபு விவாதம் நடைபெற்றது.

---



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. முன்னாள் செயலாளர் கே.பி.கே.தங்கவேலு அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் பாத்தம்பட்டி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள நினைவு வளைவை சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்வுகளில் வழக்கறிஞர் சி.ராமநாதன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஒன்றியச் செயலாளர்கள் தவ. பாஞ்சாலன், கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, எல்.குமார் (எ) துரைக்கண்ணு, எஸ்.எம்.சீனியார், வி.ஆர்.இளைய ராஜா ஒன்றிய பெருந்தலைவர்கள் வள்ளியம்மை தங்கமணி, மகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் எம்.எம்.பாலு, த.மணிராஜன், ஆர். வி.செல்வம், ராசி முருகானந்தம், கே.சி. சிவகுமார், ஆ.பழனிக்குமார், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், ஆ.கலைச்செல்வன், பாத்திமா பீவி, கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு தற்போது அதிக மக்கள் வரவேற்பு கிடைக்கிறது!

# நாடாளுமன்றத் தேர்தலில் இங்கு மோடியே வந்து நின்றாலும் தோற்பது உறுதி!

## புதுக்கோட்டையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி பேச்சு!



புதுக்கோட்டை, பிப். 23 -

புதுக்கோட்டை திலகர் திடலில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 46 வது நிகழ்வாக நடைபெற்ற இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டு விளக்கப் பொதுக்கூட்டம் வடக்கு மாவட்டம் மற்றும் நகர தி.மு.க. சார்பில் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், நகர செயலாளர் ஆ. செந்தில் வரவேற்புரையிலும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு பேசுகையில்,

அன்றைய கால கட்டத்தில் எம்.ஜி.ஆருக்கு கிடைத்த மக்கள் வரவேற்பு, தற்போது கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு கிடைத்து வருகிறது, இதனை எடப்பாடி பழனிச்சாமியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, தற்போது உதயநிதி ஸ்டாலினுக்கு அதிக வரவேற்பு கிடைக்கிறது. இன்னும் 10 ஆண்டுகள் கழித்து காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எங்கெல்லாம் அம்பேத்காருக்கு சிலை இருக்கிறதோ, அங்கெங்லாம் தந்தை பெரியாருக்கு சிலை இருக்கும், அந்த சிலையை நிறுவுபவர் உதயநிதி ஸ்டாலினாக இருப்பார் .

தமிழக முதலமைச்சராக தமிழர் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பொறுப்பேற்ற போது தமிழ்த்தாய் வாழ்த்தை உருவாக்கி நிகழ்ச்சியில் முதலில் அதனை ஒலிக்க செய்ய வேண்டும் என ஆணையிட்டு அதை வழக்கமாக கொண்டு வருகிறோம். ஆனால் ஒரு ஆளுநர் சட்டமன்றத்திற்கு உள்ளே வரும்போது விதிமுறைப்படி தேசிய கீதத்தை இசைத்து, அதன் பின்பு தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை பாடுவது மரபு. இதில் என்ன தவறு உள்ளது. ஆனால் முன்னும் பின்னும் தேசிய கீதத்தை தான் ஒலிக்கச் செய்ய வேண்டும் என ஆளுநர் கூறுகிறார். தேசிய கீதத்தின் மீது அவ்வளவு பாசம் இருந்தால் ஆளுநர் முதலில் என்ன சொன்னார் என்பதை பார்க்க வேண்டும். திராவிடம் என்ற சொல்லை இல்லை என்று கூறியவர் தான் இவர். ரவீந்திரநாத் தாகூர் எழுதிய தேசிய கீதத்தில் திராவிட உத்கல வங்கா என்று இருக்கிறது. தேசிய கீதத்தை பாடுவதாக அவர் கோபித்துக் கொண்டு செல்கிறாரே? அதில் உள்ள திராவிடம் என்ற வார்த்தை மட்டும் ஏன் அவருக்கு கசக்கிறது. அந்த தேசிய கீதத்தை பாடும் போதும் அவர் நிற்காமல் சட்டமன்றத்தை விட்டு போய்விட்டார். மொழிக்காக பலர் தீக்குளித்து மாண்டது இந்த தமிழ்நாட்டில் தான். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய தமிழ் தாய் வாழ்த்து பாடக்கூடாது என்று சொல்பவர்கள் எல்லாம் , அவர் இந்த சமுதாயத்திற்கு, இனத்திற்கு விரோதிகள் என்று தமிழக மக்கள் மத்தியில் எண்ணம் ஏற்படுகிறது.1965 ஆம் ஆண்டில் மொழி போராட்டம் மூலம் ஒரு எழுச்சி ஏற்பட்டது. அதைப்போல இன்றைக்கு ஆளுநரின் இந்த போக்கு அந்த நிலைக்கு மீண்டும் கொண்டு செல்லும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. திராவிட முன்னேற்ற கழகம் , உள்ளிட்ட கட்சிகள் தேசிய கீதத்திற்கு விரோதிகள் என்கிற கருத்தை விதைக்க பார்க்கிறார். அது நடக்காது. முரசொலி நில விவகாரத்தில் நான் தான் மனுதாரராக இருக்கிறேன். அந்த இடத்திற்கு ஆணையத்தின் தலைவராக இருந்த எல். முருகன் தற்போது பா.ஜ.க.வின் அமைச்சராக இருக்கிறார். அவர் இல்லாததை எல்லாம் சொல்கிறார். முருகன் இதனை விசாரிக்கும் போது தான் நாங்கள் வழக்கு போட்டோம். முருகன் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்பது தற்போது உறுதியாகி விட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் எதைச் செய்தாலும் சரியாகத்தான் செய்யும். நாங்கள் போட்ட எல்லா வழக்கிலும் நாங்கள் நிரபராதி என நிரூபித்து காட்டி இருக்கிறோம். முரசொலி சம்பந்தப்பட்ட இடம் யாருக்கு சொந்தமானது என்பது வெட்ட வெளிச்சமாக வெளியே வரப் போகிறது. நான் எம்.ஜி.ஆர். உடன் பிரச்சா ரத்திற்கு சென்ற போது கண்டதை தற்போது நமது இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கூடும் கூட்டத்தை பார்க்கிறேன். எம்.ஜி.ஆரை பார்த்து எப்படி பெண்கள் கூடுவார்களோ, அதே போல் இவரது பேச்சை கேட்பதற்காக மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் பெரும் வெள்ளம் ஏற்பட்ட இந்த நிலையிலும் நிதியை தர மறுக்கிறார்கள். மாநில உரிமைகளை பறிக்கிறார்கள். அதையும் மீறி சொந்த நிதியில் ஏராளமான மக்கள் நல திட்டங்களை நமது முதலமைச்சர் தளபதி அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வினர் கொஞ்சம் வேகமாக பேசுகின்றனர், காரணம் அணையப் போகிற விளக்கு தான் பிரகாசமாக எரியும், விஜயகாந்த் சினிமாவை விட்டு வெளியே வந்து வெகுநாட்கள் ஆகிவிட்டது, ஆனால் அவருக்கு இப்போது பத்ம பூஷன் விருது கொடுத்து பா.ஜ.க. தமிழ்நாடு மக்களை ஏமாற்ற பார்க்கிறது.

ஏப்ரல் 18 அல்லது 26 க்குள்ளாக நாடாளுமன்ற தேர்தல் தொடங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது, அதுவும் முதல் கட்ட தேர்தல் தமிழ்நாட்டில் தான் தொடங்க உள்ளதாக தெரிகிறது, இந்த தேர்தலில் தி.மு.க.வை ஒழித்துக்கட்ட பா.ஜ.க. முயல்கிறது, ஆனால் அது முடியாது, இந்த தேர்தலில் மோடியே வந்து தமிழ்நாட்டில் நின்றாலும் அவர் தோற்பது உறுதி. இவ்வாறு அவர் பேசினார்.

---

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!



விழுப்புரம், பிப். 23 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் 27.02.2024 செவ்வாய்கிழமை அன்று மாலை 4 மணி அளவில் செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1.வருகிற 01.03.2024 அன்றுதமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.

2.சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞரணி 2வதுமாநில மாநாட்டின் தீர்மானங்கள் விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்துவது சம்பந்தமாக

3.நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக

4.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை விடுத்துள்ளார்.

---

### விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# மரக்காணம் மேற்கு, மரக்காணம் மத்திய ஒன்றிய பிரிப்பு அறிக்கையில் திருத்தம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் ‘முரசொலி’யில் வெளியிடப்பட்ட ஒன்றிய பிரிப்பு அறிக்கையில்;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த கீழ்சிவிரி, டி.நல்லாளம் ஆகிய 2 ஊராட்சிகள் மரக்காணம் மத்திய ஒன்றியக் கழகத்தின் கீழும்;

மரக்காணம் மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த ஆடவல்லிகூத்தான் ஊராட்சி மரக்காணம் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் கீழும் இயங்கும்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18
நாள்- 22.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூராட்சியில் ரூ.24 லட்சம் மதிப்பிலான பல்வேறு பணிகளை பேரூராட்சி தலைவர் சூர்யதனபால் துவக்கி வைத்தார். உடன் பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி, பேரூராட்சி உறுப்பினர் ஜெயலட்சுமி வெங்கடேஸ்வரன், சரிதா சர்தார், நகர துணை செயலாளர் விண்ணரசன், ஐ.டி விங் கு.தமிழழகன், சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் முஜீப், ஒப்பந்ததாரர் குணசியா, ரகு ராமசந்திரன், நாகராஜ் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.